வவுனியாவில்

# மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின்

## நிலை | 2023-2024

NATIONAL CHRISTIAN
EVANGELICAL ALLIANCE
SRI LANKA

வவுனியாவில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் நிலை | 2023-2024

© 2024 National Christian Evangelical Alliance of Sri Lanka (NCEASL)
URL: www.nceasl.org

All rights reserved.

இந்த வெளியீட்டின் காப்புரிமையானது இந்த அறிக்கைக்கான அறிவுசார் சொத்துரிமை மற்றும் விநியோக உரிமைகளைக் கொண்டிருக்கும் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணிக்கு (NCEASL) சொந்தமானது.

NATIONAL CHRISTIAN EVANGELICAL ALLIANCE SRI LANKA

வவுனியாவில்

# மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின்

நிலை | 2023-2024

இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணி

2024

# அங்கீகாரங்கள்

இந்த அறிக்கை இரண்டு கள ஆலோசகர்களின் ஆதரவுடன் எழுதப்பட்டுள்ளது. இந்த அறிக்கையைத் தொகுப்பதற்கு சிரானி தேவகுமார், மற்றும் பெயர் குறிப்பிட விரும்பாத இரண்டாவது ஆலோசகர் ஒருவர் ஆகியோர் இணைந்து வவுனியா மாவட்டத்தில் உள்ள சமூக உறுப்பினர்களிடமிருந்து தரவுகளைச் சேகரிப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளனர்.

செப்டெம்பர் 2024

# உள்ளடக்கம்

1 நிர்வாக சுருக்கம்
2 முறைமையியல்
4 அறிமுகம்
5 ஆய்வு கண்டுபிடிப்புகளிலிருந்து FoRB நிலையின் மதிப்பீடு
5 மதங்களுக்கு இடையிலான பிரச்சினைகள்
5 கார்த்திகை விளக்கீட்டின் போது குறுக்கீடு
5 ஒலி மாசுபாடு தொடர்பான முறைப்பாடுகள்
5 கிறிஸ்தவப் பிரிவுகளால் மத மாற்றம் மற்றும் மதத் திணிப்பு முன்னெடுக்கப்படுவதானக் குற்றச்சாட்டு
7 (மீள்)குடியேற்றம் மற்றும் நில ஆக்கிரமிப்பின் தாக்கம்
7 சிங்களக் குடியேற்றங்கள் மூலமான சிங்கள பௌத்தமயமாக்கல்
9 வனப் பகுதிகளில் சைவக் கோவில்களின் ஆக்கிரமிப்பு
9 வெடுக்குநாறி ஆதி சிவன் கோவில் வழக்கு
11 முஸ்லிம் சமூகமும் காணிப் பிரச்சனைகளும்
11 காணி உறுதிகள் தொடர்பான பிரச்சனைகள்
11 உள்ளூர் உத்தியோகத்தர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மூலமான காணி அபகரிப்பு
12 இந்து தீவிரவாதத்தின் எழுச்சி
14 ஏனைய அறிக்கையிடப்பட்ட வழக்குகள்
14 வழிபாட்டுத் தலங்களைப் பதிவுசெய்தல்
14 கோமரசன்குளத்தில் மதச் சிலைகள் தொடர்பாக முரண்பாடு
15 அரச செயற்பாட்டாளர்களின் பங்கும் ஈடுபாடும்
15 உள்ளூர் அரச உத்தியோகத்தர்களும் முஸ்லிம்களுக்கு எதிரான பாகுபாடும்
15 தொல்லியல் திணைக்களம்
15 காவல்துறை மற்றும் இராணுவத்தின் தலையீடு
18 ஏனைய பொருத்தமான காரணிகள், அவதானிப்புகள் மற்றும் எதிர்காலப் போக்குகள்
18 ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின் தாக்கம்
18 ஊடகம்
19 பெண்கள் மீதான கட்டுப்பாடுகள்
19 மத அடையாளங்கள் சிதைந்துவிடும் என்ற அச்சம் மற்றும் மதச் சின்னங்கள் மீதான தாக்குதல்கள்
20 வவுனியாவில் அண்டை மாவட்டங்களின் செல்வாக்கு
21 நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகள்
24 பின்னிணைப்பு - அரைக்கட்டமைக்கப்பட்ட நேர்காணல் வழிகாட்டுதல்

# நிர்வாகச் சுருக்கம்

இந்த அறிக்கை குறிப்பாக 2023 - 24 ஆம் ஆண்டுகளில் வவுனியா மாவட்டத்தின் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் (FoRB) நிலையை ஆராய்கின்றது. இந்த ஆய்வின் முடிவுகள் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடனான நேர்காணல் மூலம் சேகரிக்கப்பட்டன. இந்தக் கண்டுபிடிப்புகள் மாவட்டத்தின் குழசுடீ நிலையைத் தற்போது பாதிக்கும் பல முக்கிய கருப்பொருள்கள், வடிவங்கள் மற்றும் அவதானிப்புகளை வெளிப்படுத்துகின்றன. பிராந்தியத்தில் குழசுடீ இன் நிலையைப் பாதிக்கும் பல வடிவங்களை, குறிப்பாக மத சமூகங்களுக்குள் உள்ள பல பிளவுகள் மற்றும் பிரச்சினைகளுக்கு நிலம் தொடர்பான கவலைகள் முதன்மையாக இருப்பதைக் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்துகின்றன. சிங்களக் குடியேற்றங்கள் மூலமான வவுனியாவின் ”சிங்கள - பௌத்தமயமாக்கல்” சைவ சமூகத்தின் கலாச்சார மற்றும் மதப் பாரம்பரியத்திற்கு அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்றது.  நிலங்களைத் தவறாக அளவிடுதல், பாரம்பரிய தமிழர் நிலங்களை ஆக்கிரமித்தல், சில சமயங்களில் புனிதமான சைவ வழிபாட்டுத் தலங்களை ஆக்கிரமித்தல் போன்ற தொல்லியல் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் ஏனைய அரச அமைப்புகளின் நடவடிக்கைகளால் இந்த அச்சம் மேலும் வலுப்பெற்றுள்ளது. சர்ச்சைக்குரிய வெடுக்குநாறி தளத்தின் தொடரும் பிரச்சினை மற்றும் அதில் தொல்பொருளியல் திணைக்களத்தின் தலையீடு மாவட்டத்தில் மத சுதந்திரத்திற்கான பரந்த அச்சுறுத்தலை எடுத்துக்காட்டுவதாகப் பார்க்கப்படுகின்றது. அதேவேளை, இந்த வழக்கை அரசியல் ரீதியாகக் கையாள்வது பிராந்திய அரசியல்வாதிகளின் நலன்களுக்குப் பயன்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பு ரீதியாக இலங்கை ஒரு பௌத்த நாடு என்று அடிக்கடி வலியுறுத்தப்படும் வலுவான கருத்து ஒன்றும் உள்ளது. இது ஏனைய மத சமூகங்கள் இரண்டாம் நிலை அந்தஸ்து உடையவர்களாகப் பார்க்கப்படுகின்றன என்ற கருத்தை உருவாக்கியுள்ளதுடன் இது போன்ற வழக்குகளில் அவர்களுக்குப் பாதகமாக உள்ளது. யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த முஸ்லிம் சமூகம் காணி உறுதிப்பத்திரங்களையும் அனுமதிப் பத்திரங்களையும் அதிகாரிகளிடமிருந்து மீளப் பெறுவதில் தொடர்ந்தும் சவால்களை எதிர்நோக்கிவருகின்றது. இந்த  முக்கிய விடயங்களை நிவர்த்தி செய்வதில் அரசாங்கத்தின் திறமையின்மை இந்தப் பிரச்சினை தொடர்வதற்கு வலுவான காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது.

நிலப் பிரச்சனைகள் தவிர, சிவசேனா போன்ற குழுக்களால் பரப்பப்படும் இந்துத்துவ சித்தாந்தத்தின் செல்வாக்கு, சைவ சமூகத்தின் பாரம்பரிய கலாச்சாரம் மற்றும் நடைமுறைகளுக்கு அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்றது. இந்த இயக்கத்தின் வளர்ந்து வரும் செல்வாக்கு சைவ, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமூகங்களுக்கு நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்துத்துவா குழுக்களுக்கும் சிங்கள - பௌத்தத்தை ஆதரிப்பவர்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பு எதிர்காலத்தில் பிரச்சினையாகலாம் என்றும் பார்க்கப்படுகின்றது.

ஒலி மாசுபாடு, நாசவேலை சம்பவங்கள் மற்றும் கிறிஸ்தவக் குழுக்கள் மீதான மத மாற்றக் குற்றச்சாட்டுகள் ஆகியவை மதங்களுக்கு இடையிலான மோதல்களில் கூடுதல் பதட்டங்களாக உள்ளன. தற்போதைய பொருளாதார நெருக்கடி, கடுமையான வறுமை மற்றும் அபிவிருத்தியின்மை ஆகியவை மாவட்டத்தில் மத மாற்றத்திற்கான முக்கிய காரணிகளாகக்

குறிப்பிடப்படுகின்றன. வழிபாட்டுத் தலங்களைப் பதிவு செய்வதில் உள்ள சிரமங்கள், மதச் சிலைகள் மற்றும் சின்னங்களை அகற்றுவது மற்றும் வைப்பது தொடர்பான மோதல்கள் தொடர்பான வழக்குகளும் கடந்த ஆண்டில் இடம்பெற்றுள்ளன.

தொல்பொருள் திணைக்களம், வனத் திணைக்களம், காவல் துறை மற்றும் இராணுவம் ஆகியவற்றின் பரவலான பிரசன்னத்துடன் இணைந்து, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு பாதகமான வகையில் செயற்படுவதில், இம் மாவட்டத்தில் அரசின் பங்கு குறிப்பாக முக்கியமானது. மேலும், உள்ளூர் அதிகாரிகள் இன - மத அடிப்படையில் பக்கச்சார்பாகச் செயற்படுவதும் பதிவாகியுள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் சாத்தியமான திருப்புமுனைகளாக அமையலாம் என்பதுடன் தேர்தல் காலங்களில் அமைதியின்மையை ஏற்படுத்துவதற்காக தற்போதுள்ள பிரச்சினைகள் தீவிரப்படுத்தப்படலாம் என்ற கவலையும் உள்ளது. இம்மாவட்டத்தில் இன - மத அடிப்படையில் பிளவுபட்ட வாக்காளர் தளங்களைக் கொண்ட அரசியல்வாதிகள் இத்தகைய மோதல்களைப் பயன்படுத்தி தங்கள் ஆதரவைத் திரட்டுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சமூக ஊடகங்கள், புலம்பெயர் சமூகத்தின் செல்வாக்கு மற்றும் சமூகங்களைத் தூண்டும் வகையில் மதச் சின்னங்களைக் கையாளுதல் ஆகியவையும் மாவட்டத்தில் முக்கிய கவலைக்குரிய விடயங்களாக உள்ளன. மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற அண்டை மாவட்டங்களில் நிகழும் குழசுடீ தொடர்பான பிரச்சினைகள் வவுனியாவில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், அவை எதிர்காலத்தில் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட வேண்டும்.

## முறைமையியல்

இந்த ஆய்வு பண்பு வகை சார்ந்த ஆய்வு முறையைப் பயன்படுத்தி நடத்தப்பட்டது. இம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு சமூகங்களைப் பாதிக்கும் மதச் சுதந்திரத்தின் நிலை பற்றிய புரிதலை வழங்குவதில் மிகவும் திறமையானவர்கள் இணைக்கப்படுவதை உறுதி செய்வதற்காக கள ஆலோசகர்களுடன் கலந்தாலோசித்து சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் அடையாளம் காணப்பட்டனர். இந்த அடையாளம் காணப்பட்ட பங்குதாரர்களுடன் முக்கிய தகவலறிந்த நேர்காணல்கள் நடத்தப்பட்டன. களத் தரவு ஜூலை மற்றும் செப்டம்பர் 2024க்கு இடையில் சேகரிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை உருவாக்க நேர்காணல் செய்யப்பட்ட பங்குதாரர்களின் விவரத்தை பின்வரும் அட்டவணை வழங்குகின்றது.

| பங்குதாரர்களின் வகை | நேர்காணல்களின் எண்ணிக்கை |
|---|---|
| கள ஆலோசகர்கள் | 2 |
| உள்ளூர் அரசியல்வாதி | 1 |
| சிவில் சமூக செயற்பாட்டாளர்கள்/ மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் | 7 |
| சட்டத்தரணி | 1 |
| மதத் தலைவர்கள்<br>*சைவம், கிறிஸ்தவம், கத்தோலிக்கம் மற்றும் பௌத்த சமூகங்களைப் பிரதிபலிக்கும் ஒவ்வொரு பிரதிநிதிகள் | 5 |
| ஊடகவியலாளர் | 1 |
| மொத்தம் | **17** |

## முறைமையியலின் வரையறைகள்

இவ்ஆய்வு மிகக் குறுகிய காலத்தில் நடத்தப்பட்டது எனவே தரவு சேகரிப்பு காலம் மற்றும் பங்குதாரர்களின் நேர்காணல்களின் எண்ணிக்கை எதிர்பார்த்த அளவுக்கு விரிவானதாக இல்லை. எனவே, சிறியளவிலான சில சிக்கல்கள் மற்றும்  கவனத்திற்குரிய விடயங்கள் இந்த அறிக்கையில் தற்செயலாக. தவறவிடப்பட்டிருக்கலாம்

## அறிமுகம்

வட மாகாணத்தில் அமைந்துள்ள வவுனியா இப்பிராந்தியத்தின் மத்திய மாவட்டமாகக் கருதப்படுகின்றது. மொத்த சனத்தொகையாக 172,115 பேரை உள்ளடக்கிய வவுனியா பிரதானமாக ஒரு தமிழ் மாவட்டமாகும். இம்மொத்த சனத்தொகை 141,144 தமிழர்களையும், 11,748 இலங்கை முஸ்லீம் மக்களையும், 17,138 சிங்களவர்களையும் உள்ளடக்கியுள்ளது. மதங்களின் அடிப்படையில் நோக்குகையில் இது இந்துக்களை (119,401), பெரும்பான்மையாகக் கொண்டுள்ளது. தொடர்ந்து (16,853) பௌத்தர்களையும் (15,305) கத்தோலிக்கர்களையும் (11,972) முஸ்லிம்களையும் கொண்டுள்ளது[1] இந்த மாவட்டத்தில் வசிக்கும் சமூகங்கள் யுத்தத்தின்போது கடுமையான இடப்பெயர்வுகளை அனுபவித்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலகங்கள் உள்ளன. 2009 ஆம் ஆண்டு முதல் வவுனியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் சிங்களக் குடியேற்றங்கள் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வவுனியாவில் பல்லின மற்றும் பல மதங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்வதாலும் சிங்களக் கிராமங்களுக்கு அருகாமையில் இருப்பதாலும் மீள்குடியேற்றச் செயற்பாடுகள் வவுனியாவை மோதல்கள் நிகழக்கூடிய மாவட்டமாக மாற்றியுள்ளது. இடம்பெயர்ந்து வேறு இடங்களில் குடியமர்ந்த தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகள் தற்போது சிங்களக் குடியேற்றவாசிகளால் அதிகளவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையினை காணக்கூடியதாக உள்ளது. அண்மைக் காலங்களில் வெடுக்குநாறி ஆதி சிவன் கோவில் விவகாரம் போன்ற தொல்பொருள் தகராறுகள் தொடர்பான விடயங்கள் காரணமாக வவுனியா சர்ச்சைக்குரிய பிரதேசமாக மாறியுள்ளது. இத்தலம் சைவ மக்களாலும் பௌத்தர்களாலும் புனிதமான இடமாகக் கருதப்படுகின்றது. மேலும், இலங்கை வனப் பாதுகாப்புத் திணைக்களம்[2] மற்றும் இராணுவம்[3] சம்பந்தப்பட்ட நிலம் அபகரிப்பு வழக்குகளும் இந்த மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. மேலும், இந்தியாவில் இருந்து பெறப்பட்ட இந்து தேசியவாதத்தின் ஒரு வடிவமான இந்துத்துவாவை ஆதரிக்கும் குழுக்கள் மாவட்டத்தில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மாவட்டத்தில் பௌத்த மதத் திணிப்பு உள்ளிட்ட சிங்களமயமாக்கல் மற்றும் அதற்குச் சமமாக இந்து தீவிரவாதத்தின் எழுச்சி ஆகியவற்றினால் சிறுபான்மை மதச் சமூகங்களான கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் மேலதிகச் சவால்களை எதிர்கொள்கின்றனர். மேற்கூறியவற்றைக் கவனத்தில்கொண்டு, இந்த அறிக்கை வவுனியா மாவட்டத்தில் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு இடையே, பல்வேறு மத சமூகங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இந்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற முக்கிய பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி மத சுதந்திரத்தின் நிலை தொடர்பான கண்ணோட்டத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

1 Census and Statistical Report 2012, Sri Lanka

2 Tamils halt land grab attempt in Vavuniya by Sri Lanka's Forest Department. (2024, June 12). https://www.tamilguardian.com/content/tamils-halt-land-grab-attempt-vavuniya-sri-lankas-forest-department

3 Society for Threatened Peoples. (2018). The Vanni - Civilian Land under Military Occupation. https://www.gfbv.ch/wp-content/uploads/sri-lanka-vanni-e-lang.pdf

# ஆய்வு கண்டுபிடிப்புகளிலிருந்து FoRB நிலையின் மதிப்பீடு

## மதங்களுக்கு இடையிலான பிரச்சினைகள்

### *கார்த்திகை விளக்கீட்டின் போதான குறுக்கீடு*

கார்த்திகை (நவம்பர்) மாதத்தில் சைவர்கள் கொண்டாடும் கார்த்திகை விளக்கீடும் (கார்த்திகை தீபத் திருவிழா), யுத்தத்தில் உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் நினைவாக அனுஷ்டிக்கப்படும் மாவீரர் தினமும் ஒரே நாளில் வருகின்றது. கடந்த காலங்களில் கார்த்திகை விளக்கீட்டின்போது கோவில்களில் நடைபெறும் பூஜைகளில் காவல்துறை, இராணுவம் மற்றும் அரச புலனாய்வுத்துறை அதிகாரிகள் சம்பவ இடங்களுக்குச் சென்று நிகழ்வுகளைச் சீர்குலைத்து, நபர்களைக் கைது செய்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.[4] இந்தக் காலப்பகுதியில் பூஜை பொருட்களைச் சேதப்படுத்துதல், விளக்குகளை அணைத்தல் போன்ற நடவடிக்கைகள் உட்பட தீவிர கண்காணிப்பைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

### *ஒலி மாசுபாடு தொடர்பான முறைப்பாடுகள்*

கிறிஸ்தவ (ரோமன் கத்தோலிக்கர் அல்லாதவர்கள்) குழுக்களால் ஏற்படும் இடையூறுகள், குறிப்பாக அவர்களின் மத நடவடிக்கைகளின் போது ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவது குறித்து வவுனியா மாவட்டத்தில் உள்ள இந்துக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மறவன்குளம் பகுதியில் கிறிஸ்தவ போதகர் ஒருவர் ஒலிபெருக்கியைப் பயன்படுத்தியதன் காரணமாக அருகாமையிலுள்ள சைவ - இந்து சமூகத்தினர் 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் கிராம நிர்வாக அதிகாரியிடம் முறைப்பாடு செய்தது இதற்கான ஒரு உதாரணம் ஆகும். போதகரை மத்தியஸ்த பேச்சுவார்த்தைக்கு அழைத்ததன் மூலம் பிரச்சினை காவல்துறைக்குச் செல்லாமல் தீர்க்கப்பட்டது. அதேவேளை, சைவ சமூகமும் தங்கள் மத வழிபாட்டின் போது சில பகுதிகளில் சத்தமான இசையைப் பயன்படுத்தி ஒலி மாசுபாட்டிற்குப் பங்களிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

### *கிறிஸ்தவப் பிரிவுகளால் மத மாற்றம் மற்றும் மதத் திணிப்பு முன்னெடுக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு*

சில கிறிஸ்தவ (ரோமன் கத்தோலிக்கர் அல்லாத) மதக் குழுக்கள் சைவ சமூகங்களைக் குறிவைத்து, குறிப்பாக மிகவும் ஏழ்மையான மற்றும் பின்தங்கிய கிராமங்களில் மத மாற்றங்களை முன்னெடுப்பதாகக் கூறப்படுகின்றது. கிறிஸ்தவக் குழுக்கள் பெரும்பாலும் மதமாற்றத்தைத் தூண்டுவதற்கான ஒரு வழியாக வாழ்வாதார உதவிகளை வழங்குகின்றன என்பது உணரப்படுகின்றது. மேலும் இந்த மதமாற்றங்களால் சைவ மக்கள்தொகையில் ஏற்படக்கூடிய சாத்தியமான வீழ்ச்சியைப் பற்றி கவலை எழுப்பப்பட்டுள்ளது. பெரும்பாலும் வவுனியாவில் சாதிப் பாகுபாடுகளை எதிர்கொள்ளும் விளிம்புநிலைப் பின்னணியில் உள்ள இந்து மக்களை யெகோவாவின் சாட்சிகள் தீவிரமாக மதமாற்றம் செய்வதாகத்

4 Jaffna Uni student arrested and further crackdown on Karthikai festival. (2020, November 29). https://www.tamilguardian.com/content/jaffna-uni-student-arrested-and-further-crackdown-karthikai-festival

தெரிவிக்கப்படுகின்றது. இந்து சமூகத்தில் காணப்படும் சாதி அடிப்படையிலான ஓரங்கட்டப்படுதல், சமூகப் புறக்கணிப்பிலிருந்து நிவாரணம் தேடும் நபர்களை, மதமாற்ற முயற்சிகளுக்கு எளிதான இலக்காக ஆக்குகின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் மேலும் தீவிரமடைந்துள்ள பொருளாதாரக் கஷ்டத்தைப் பயன்படுத்தி, இந்த மதக் குழுக்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவதற்கு ஈடாக பணம், பொருட்கள் மற்றும் பிற உதவிகளை வழங்கிச் சுரண்டுவதாகக் கூறப்படுகின்றது. குடும்ப நிதியை நிர்வகிப்பதற்கான பொறுப்பின் காரணமாக பெண்கள் மதம் மாறுவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. மேலும் இது பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் அதிகமாகக் காணப்படுகின்றது. கணவர்கள் போதைப்பொருள் மற்றும் மதுவுக்கு அடிமையாகி போராடும் சந்தர்ப்பங்களில் இது மிகவும் அதிகமாக உள்ளது. இந்தப் பெண்கள் தங்கள் குடும்பங்களுக்கு ஸ்திரத்தன்மை மற்றும் ஆதரவை நாடும்போது மத மாற்ற முயற்சிகளால் எளிதில் பாதிக்கப்படுகின்றனர். மேலும், அத்தகைய பெண்களுக்கு திருச்சபைகள் வழங்கும் ஆலோசனை மற்றும் உளவியல் ஆதரவு ஒரு குறிப்பிடத்தக்க ஈர்க்கும் காரணியாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் இது அவர்களுக்கு நிவாரணம் மற்றும் ஸ்திரத்தன்மையை வழங்குகின்றது. யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து பின்னர் மீள்குடியேறியவர்கள் அரசாங்கத்திடமிருந்து போதிய வீட்டுவசதி அல்லது நட்ட ஈடுகளைப் பெறாதபோது மத மாற்ற முயற்சிகளில் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்தச் சமூகங்களின் தேவைகளை நிவர்த்தி செய்யத் தவறிய உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்களின் அலட்சியம் இந்தப் பாதிப்பிற்கு ஓரளவு பங்களிக்கின்றது.

வவுனியாவில் மத மாற்ற முயற்சிகளில் அநேகமானவை மாவட்டத்திற்கு வெளியில் இருந்து வரும் நபர்களால் முன்னெடுக்கப்படுவதாகவும், பாரம்பரியமாக மாவட்டத்திற்குள் மதமாற்றம் குறித்து குறிப்பிடத்தக்க கவனத்திற்குரிய விடயங்கள் எதுவும் காணப்படவில்லை என்றும் நேர்காணல்கள் வெளிப்படுத்துகின்றன. எனினும், வெளிநாட்டு அமைப்புகளால் ஆதரிக்கப்படும் சில கிறிஸ்தவப் பிரிவுகள், செல்வாக்கைச் செலுத்துவதற்கான ஒரு கருவியாக மதமாற்றத்தைப் பயன்படுத்துகின்றன என்ற கருத்து வளர்ந்து வருகின்றது. திருமணம் மற்றும் மதமாற்றம் மூலம் பாரம்பரிய கிராமங்களின் சனத்தொகை அமைப்பு மாறிவருவது இந்து கலாச்சாரத்திற்கு அச்சுறுத்தலாக சிலர் கருதுகின்றனர்.

மறவன்குளம் பகுதியில் உள்ள ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தைச் சேர்ந்த கன்னியாஸ்திரி ஒருவருடனான நேர்காணலில், பெற்றோருக்கு வழிகாட்டுதல், ஞாயிறு பாடசாலை மற்றும் ஆலோசனை சேவைகள் ஆகியவற்றை அவர்கள் வழங்குவதுடன் இதற்கு இந்துக்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் என அனைவரையும் வரவேற்பதாகத் தெரிவித்தார். இந்த முயற்சிகள் மூலம் மத மாற்றங்கள் முன்னெடுக்கப்படுவதாக பொதுவான பேச்சுக்கள் இருந்தாலும், இந்தக் கூற்றுகள் தவறானவை என அவர் வலியுறுத்தினார். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும், உணவுப் பொருட்கள், மருத்துவ உதவி மற்றும் நோய்வாய்ப்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு உதவி ஆகியவற்றை தேவாலயம் வழங்குகின்றது. எனினும் இவ்வாறான உதவிகள் பெரும்பாலும் கிராமவாசிகளால் சந்தேகத்துடன் பார்க்கப்படுகின்றது. இவ்வாறான உதவிகளை வழங்குவதில் தேவாலயம்

எதிர்கொள்ளும் கூடுதல் சவால்கள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என அவர் மேலும் குறிப்பிட்டார். உதாரணமாக, சில மாதங்களுக்கு முன்பு குற்றவியல் விசாரணை திணைக்கள உத்தியோகத்தர்கள் தேவாலயத்திற்குச் சென்று உதவிகளை முன்னெடுப்பதற்கான நிதி ஆதாரம் குறித்து விசாரித்துள்ளனர். மேலும், அவர்கள் கட்டாய மத மாற்றத்தில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டி மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சிவசேனா குழுவினரால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட புத்தகத்தை மறவன்குளம் உட்பட அப்பகுதியில் உள்ள அனைத்து தேவாலயங்களுக்கும் அனுப்பியதாகக் கூறப்படுகின்றது.

## (மீள்) குடியேற்றம் மற்றும் நில ஆக்கிரமிப்பின் தாக்கம்

### *சிங்களக் குடியேற்றங்கள் மூலமான சிங்கள - பௌத்தமயமாக்கல்*

2009 ஆம் ஆண்டிலிருந்து வவுனியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் சிங்களக் குடியேற்றங்கள் வேகமாக விரிவடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் குடியேற்றங்களுக்கு மக்கள் வசிக்காத பகுதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதுடன், பின்னர் அங்கு புத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. 2012 மக்கள்தொகை கணக்கெடுப்பின் பிரகாரம், 172,115 எண்ணிக்கையான மக்கள் வசிக்கும் மாவட்டத்தில் தற்போது 17,138 சிங்களவர்கள் காணப்படுகின்றனர். இந்த மக்கள்தொகை மாற்றம் சிறுபான்மை மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கான ஒரு உத்தியாகக் கருதப்படுகின்றது. இந்தக் குடியேற்றங்கள் பரந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாகப் பார்க்கப்படுவதுடன், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை “எல் வலயத்தில்” இணைத்ததன் மூலம், இந்தப் பகுதிகளில் தமிழ் அரசியல் செல்வாக்கைக் குறைப்பதற்கான காலனித்துவ முயற்சியாக சிலரால் பார்க்கப்படுகின்றது. மேலும், அரச அமைப்புகளின் நில எல்லை நிர்ணயத்தின் நோக்கங்கள் மற்றும் துல்லியம் குறித்து சமூகங்கள் மத்தியில் அச்சங்கள் உள்ளன. உதாரணமாக, 2023 ஆம் ஆண்டு வவுனியாவில் உள்ள தமிழ் கிராமமான கருப்பனிச்சங்குளத்தில், கொக்குவெளிக்கு அருகிலுள்ள சிங்கள மக்களுக்கான மயானத்திற்காக விவசாய நிலத்தை அளவிட வந்த அரச அதிகாரிகள் உள்ளூர்வாசிகளின் எதிர்ப்பை எதிர்கொண்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.[5]

தொல்லியல் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடாக திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் காணி ஆக்கிரமிப்பு இம்மாவட்டத்தில் ஒரு பரவலான பிரச்சினையாகக் குறிப்பிடப்படுகின்றது. வவுனியாவில் உள்ள பல எல்லைக் கிராமங்கள் பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் போன்ற சிங்கள மக்கள் வாழும் மாவட்டங்களுக்கு அருகில் உள்ளன. இந்தப் புவியியல் நெருக்கம் வவுனியாவில் உள்ள தமிழ் எல்லைக் கிராமங்களில் சிங்கள மக்கள் குடியேற்றுவதற்கு வழிவகுத்துள்ளதுடன், குடியேறியவர்கள் இந்தக் கிராமங்களைத் தங்களுடையது என உரிமை கோருகின்றனர்.

மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங்கள் இருப்பதாக பல செய்திகள் வந்துள்ளன. உதாரணமாக,

5 பௌத்த பிக்கு தலைமையில் வவுனியாவில் தமிழர்களின் விவசாய நிலத்தை மயானமாக்க முயற்சி : அளவீட்டு பணிக்கு தமிழ் மக்கள் எதிர்ப்பு. (2023, September 15). https://www.virakesari.lk/article/164658

1987 ஆம் ஆண்டு யுத்தத்தின்போது பாரம்பரிய தமிழ் கிராமமான கொக்கச்சான்குளம், மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் சிங்களக் குடியேற்றங்களால் அப்பகுதிஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. தற்போது 2,000க்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் அங்கு வாழ்வதுடன் மேலும் அக் கிராமத்தின் பெயர் போகஸ்வெவ என மாற்றப்பட்டுள்ளதுடன் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நேர்காணல்களின் பிரகாரம், ஈரளக்குளம், தேக்கவத்தை, செட்டிக்குளம் போன்ற தமிழ் கிராமங்கள் கடந்த காலங்களில் இதேபோன்று ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. ஓமந்தை பிரதேசத்தில் உள்ள தமிழர்களின் காணி ஒன்று சிங்களக் குடியேற்றக்காரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும், அந்தப் பகுதி நாமல் கம என பெயர் மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு பௌத்தத்தை முதன்மைப்படுத்துவதால் ஏனைய சமூகங்கள் இரண்டாம் நிலை அந்தஸ்தைப் பெற்றுள்ளன என்பதை சைவ - தமிழ் சமூகத்துடனான நேர்காணல்கள் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தின. இந்த உணர்வு பௌத்தத் தலைவர்களுக்கும் ஏனைய மத சமூகங்களின் தலைவர்களுக்கும் வழங்கப்படும் மரியாதை மற்றும் அங்கீகாரத்தில் காணப்படும் வேறுபாடுகளால் வலுப்படுத்தப்படுகின்றது. தொடரும் சிங்களக் குடியேற்றங்கள் இம்மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களின் கலாச்சார மற்றும் மத அடையாளத்தைச் சிதைத்துவிடும் என்று பலரும் அஞ்சுகின்றனர். வவுனியாவில் தமிழர்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் மாவட்டச் செயலாளர் பதவி போன்ற முக்கிய நிர்வாக நியமனங்கள் இல்லாமை இந்த உணர்வை அதிகரித்துள்ளது. தற்போது அந்தப் பதவிக்கு சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். நேர்காணலில் ஈடுபட்டவர்கள் சிலர் தங்கள் புரிதலின்படி, சிங்கள மக்களின் குடியேற்றத்திற்கு அரசியல்வாதிகள் அனுசரணை வழங்குவதாகவும், சிங்களப் பகுதிகளுக்கு தார் வீதிகள் போன்ற சிறந்த உட்கட்டமைப்பு மற்றும் வள ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதாகவும், அதேவேளை தமிழர் பகுதிகள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டனர். மேலும், சிங்களப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் காணி கொள்வனவு செய்வதற்கு பிரதேச செயலகம் அனுமதியளிக்க மறுப்பது உட்பட உள்ளூர் உத்தியோகத்தர்கள் பக்கச்சார்புடன் செயற்படுவதாகக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

மறுபுறம் மதுகந்தவில் உள்ள பௌத்த பிக்கு ஒருவருடனான நேர்காணலில், சில தமிழ் அரசியல்வாதிகள் மத்தியில் பிரதேச சார்பு மற்றும் பாகுபாடுகள் காணப்படுவதாகவும், அவர்களில் சிலர் வவுனியாவில் உள்ள காணிகளை சிங்கள மக்களுக்கு வழங்கக்கூடாது என வெளிப்படையாகக் கூறுவதாகவும் குறிப்பிட்டார். வவுனியா முழுவதிலும் அமைந்துள்ள கிராமங்களில் சிங்கள - பௌத்த மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்தாலும், எல்லை மற்றும் மீள்குடியேற்றக் கிராமங்களில் வசிப்பவர்களுக்கான ஆதரவு சீராக இல்லை என பிக்கு குறிப்பிட்டார். மேலும், வவுனியாவில் உள்ள சிங்கள - பௌத்த சமூகங்களுக்கு வறுமை ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாக உள்ளது என்றும், இது பரந்த விவாதங்களில் கவனிக்கப்படாத ஒரு பிரச்சினை என்றும் பிக்கு சுட்டிக்காட்டினார்.

### *வனப் பகுதிகளில் சைவக் கோவில்களின் ஆக்கிரமிப்பு*

தமிழ் சைவ சமூகங்கள் பல தலைமுறைகளாக வழிபட்டுவரும் பல பாரம்பரிய சைவக் கோவில்கள் காடுகளை ஒட்டிய பகுதிகளில் அமைந்துள்ளன. இந்தக் காணிகள் பௌத்த மதத்திற்குச் சொந்தமானது எனக் கூறி தொல்பொருளியல் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் இராணுவத்தினரால் இந்தப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுவது அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் பௌத்த சிலைகள் வைக்கப்பட்டு, விகாரைகள் நிர்மாணிக்கப்படுவதன் மூலம் இந்த நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்படுகின்றன. குறிப்பாக வனப் பாதுகாப்புத் திணைக்களம், போரின்போது கைவிடப்பட்ட கிராமங்களில் காடுகள் வளர்ச்சியடைந்ததன் காரணமாக தற்போது இந்தப் பகுதிகள் திணைக்களத்திற்குச் சொந்தமானது எனக் குறிப்பிட்டு, இடம்பெயர்ந்த மக்கள் தமது காணிகளுக்குத் திரும்புவதைத் தடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### *வெடுக்குநாறி ஆதி சிவன் கோவில் வழக்கு*

2018 ஆம் ஆண்டில் தொல்பொருளியல் திணைக்களம் வவுனியா மாவட்டத்தில் உள்ள வெடுக்குநாறி ஆதி சிவன் கோவில் உட்பட பல இடங்களைத் திணைக்களத்திற்குச் சொந்தமானது என அடையாளம் கண்டது.[6] அன்று முதல் இப்பகுதி ஒரு சர்ச்சைக்குரிய இடமாக மாறியது. இது சைவ மற்றும் பௌத்த சமூகங்களின் பல்வேறு பிரிவுகளுக்கு இடையே மோதலுக்கு வழிவகுத்ததுடன் இவை இரண்டும் இப்பகுதியை முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கோர முயல்கின்றன. சைவ சமூகத்தினர் வெடுக்குநாறி ஆதி சிவன் கோவில் ஒரு இந்து ஆலயம் என்று நம்புகின்றனர். அதேவேளை பௌத்த பிக்குகளும் தொல்லியல் திணைக்களமும் இது ஒரு பண்டைய பௌத்தத் தலம் எனக் கருதுகின்றனர். இவ்வழக்கின் அண்மைய நிகழ்வுகள் வவுனியாவில் சைவ சமூகத்தின் மதச் சுதந்திரம் மற்றும் ஏனைய உரிமை மீறல்கள் பற்றிய கவலைகளை எழுப்பியுள்ளன. 2023 மார்ச் மாதம் கோவிலின் சிலைகள் அடையாளம் தெரியாத நபர்களால் அவமதிக்கப்பட்டன. இது சமூகத்தில் பதட்டத்தை ஏற்படுத்தியது. இச்சம்பவத்தையடுத்து தமிழ் சிவில் சமூகத்தினர் தலைமையில் இந்த அழிவைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 2024 பெப்ரவரி மாதம் இலங்கை இராணுவம், பௌத்த பிக்குகளுடன் அந்த இடத்திற்கு விஜயம் செய்தது. அதன்போது வெடுக்குநாறி ஆதி சிவன் கோவில் ஒரு புராதன பௌத்த தலம் என்று பிக்குகள் தொடர்ந்து வலியுறுத்தினர். 2024 மார்ச் மாதம் சிவராத்திரி விழாவின் போது[7], கோவிலின் பிரதான பூசாரி உட்பட எட்டு தமிழ் - சைவ வழிபாட்டாளர்களை அதிகாரிகள் தடுத்து வைத்தனர். கைது செய்யப்பட்டவர்கள் இறுதியில் விடுவிக்கப்பட்டனர், மேலும் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் தள்ளுபடி செய்யப்பட்டன. 2024 இன் ஆரம்ப காலப்பகுதிகளில்

---

6 Sri Lanka's archaeology department takes over Tamil temple lands in Vavuniya. (2018, August 12). https://www.tamilguardian.com/content/sri-lanka%E2%80%99s-archaeology-department-takes-over-tamil-temple-lands-vavuniya

7 Sinhala Buddhist monks call on Sri Lankan police to halt Shivarathri at Vedukkunaari Temple. (2024, March 7). https://www.tamilguardian.com/content/sinhala-buddhist-monks-call-sri-lankan-police-halt-shivarathri-vedukkunaari-temple
Sri Lankan Authorities Detain Hindu Worshippers | Human Rights Watch. (2024, March 19). https://www.hrw.org/news/2024/03/19/sri-lankan-authorities-detain-hindu-worshippers

தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக வவுனியா, நெடுங்கேணி[8] முழுவதும் பாரிய போராட்டங்கள் நடைபெற்றன.[9] 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி வவுனியா உயர்நீதிமன்றம், புராதனச் சின்னத்திற்கு எவ்வித இடையூறுகளோ சேதங்களோ ஏற்படாத வகையில் அனைத்துத் தரப்பினரும் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றியது.[10]

இந்த வழக்கில் தொல்பொருட்கள் சட்டத்தைப் பயன்படுத்துவது ஒரு தீவிரமான பிரச்சினை என்று கோவில் நிர்வாகம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி குறிப்பிட்டார். சைவ மற்றும் ஏனைய சமூகங்கள் கோவிலுக்குச் செல்வதைத் தடுப்பதற்கான ஒரு கருவியாக இந்தச் சட்டம் அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார். தொல்பொருட்கள் சட்டத்தின் கீழ் பிணை வழங்குவதற்கு உள்ள கடுமையான விதிமுறைகள் மற்றும் 2024 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கோவிலின் பழங்காலப் பொருட்களைச் சேதப்படுத்தியதாகக் கூறப்படும்[11] கைதுகளில் சட்டத்தின் பயன்பாடு குறித்தும் சட்டத்தரணி கவலை தெரிவித்தார். இந்த வழக்கு பல ஆண்டுகளாக அதிகார அரசியலாக உருவெடுத்துள்ளதுடன், பிராந்திய அரசியல்வாதிகள் வாக்காளர்களைத் திரட்டுவதற்கு இதைப் பயன்படுத்துகின்றனர் என்பதையும் வழக்கு குறித்து தவறான தகவல்களைப் பரப்புவதில் சமூக ஊடகங்களின் பங்கையும் சட்டத்தரணி எடுத்துரைத்தார். அனுராதபுரம் போன்ற பௌத்தர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் உள்ள ஏனைய தொல்பொருள் தளங்களில் எந்தவொரு தீவிர கட்டுப்பாடும் காணப்படுவதில்லை என்பதுடன் பொதுமக்கள் அனைவரும் அணுகக்கூடியதாக இருக்கின்றது. இவற்றுடன் ஒப்பிடும்போது வெடுக்குநாறியைச் சுற்றிக் காணப்படும் கடுமையான விதிமுறைகள் குறித்து நேர்காணல் வழங்கிய சைவர்கள் கவலை எழுப்பியுள்ளனர். இந்த ஏற்றத்தாழ்வானது, தொல்பொருளியல் திணைக்களம் இதை ஏன் பௌத்த தளமாக வகைப்படுத்தி சைவ வழிபாட்டாளர்களுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துவதில் தீவிரமாக இருக்கின்றது என்ற கேள்வியை சைவ சமூகம் எழுப்ப வழிவகுத்துள்ளது. வெடுக்குநாறி போன்ற உயர்மட்ட வழக்குகளுக்கு அளிக்கப்படும் கவனமானது, வவுனியாவில் உள்ள சிறிய கோவில்களில் நிலவும் வளப்பற்றாக்குறை மற்றும் நியாயமான ஊதியம் உட்பட பூசாரிகளின் உரிமை மீறல் பிரச்சனைகளை பெரும்பாலும் மறைப்பதாக சைவ மதத் தலைவர் ஒருவர் மற்றொரு கருத்தை முன்வைத்துள்ளார். வெடுக்குநாறி வழக்கு மாவட்டத்தில் ஒரு மதப் பிரச்சினையாகப் பார்க்கப்படுவதை விட அரசியல் பிரச்சினையாகப் பார்க்கப்படுவதையும் பூசாரி அவதானித்தார். இதில் தொடர்புடையவர்கள் இந்தத் தொடரும் பிரச்சனையால் அரசியல் இலாபம் ஈட்டுவதாக சமூகங்கள் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

---

8 Hartal halts Nedunkerny as protests against Sri Lanka's assault of Tamils continue. (2024, March 16). https://www.tamilguardian.com/content/hartal-halts-nedunkerny-protests-against-sri-lanka-s-assault-tamils-continue

9 United States Commission on International Religious Freedom. (2024). Sri Lanka's Shrinking Space for Religious Minorities. https://www.uscirf.gov/sites/default/files/2024-06/2024%20Sri%20Lanka%20Country%20Update.pdf

10 வெடுக்குநாறிமலை சர்ச்சைக்கு உயர்நீதிமன்றில் இணக்கத் தீர்வு. (2024, August). Tamil News. https://samugammedia.com/amicable-settlement-of-vedukunarimalai-dispute-in-high-court-1723208948?page=1

11 Sri Lanka's archaeology department claims Vedukkunaari devotees damaged temple antiquities. (2024, March 12). https://www.tamilguardian.com/content/sri-lankas-archaeology-department-claims-vedukkunaari-devotees-damaged-temple-antiquities

### *முஸ்லிம் சமூகமும் காணி பிரச்சினைகளும்*

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் இடம்பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்கள் பல வவுனியாவில் அமைந்துள்ள தமது காணிகளுக்குத் திரும்பி வந்தபோது இராணுவம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் தமிழ் குடியிருப்பாளர்களால் அவை ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததைக் கண்டனர். 1990 ஆம் ஆண்டு வரை சாளம்பைக்குளம் கிராமத்தில் வாழ்ந்த முஸ்லிம் குடும்பங்கள் அங்கு மீண்டும் சென்றபோது அந்தக் காணிகள் பிரதேச மற்றும் மாவட்டச் செயலகங்களால் தமிழ் மக்களுக்கு மீளவழங்கப்பட்டிருந்தன. இந்தக் குடும்பங்கள் தமது காணிகளுக்கு ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த அனுமதிப்பத்திரங்களை தம் வசம் வைத்திருந்தன. வடக்கு மற்றும் கிழக்கில் காணி அனுமதிப்பத்திரங்களை வருடாந்தம் புதுப்பிக்கும் முறையானது காணி உரிமைகள் மற்றும் உரிமைப் பிரச்சினைகளை இந்தச் சமூகங்களுக்குச் சிக்கலாக்கியுள்ளன. மேலும், மெனிக் பார்ம் பகுதியில் முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகத்தினரின் காணிகள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.[12] 2010 ஆம் ஆண்டு முதல், இந்தச் சமூகங்கள் தங்கள் நிலங்களை மீட்பதற்காகப் போராடி வருகின்றன. ஆனால் இராணுவம் கட்டுப்பாட்டைக் கைவிட மறுத்ததால் அவர்களின் முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

### *காணி உறுதிகள் தொடர்பான பிரச்சினைகள்*

போரினால் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்ட பல தமிழ் மக்கள் இன்னமும் முறையான சட்டபூர்வ காணி உறுதிகள் இல்லாமல் உள்ளனர். காணி மீட்பு முயற்சிகளில் உள்ள சிக்கல்களால் இந்தப் பிரச்சினை மோசமடைந்துள்ளது. பெரும்பாலும் மக்கள் இல்லாத காலத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் வனப் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில், அவர்களது சொத்துக்களை மீட்பதில் சிரமம் காணப்படுகின்றது. இம்மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதில் அரசாங்கம் காலதாமதம் செய்வதாகவும், இவ்விடயம் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை எனவும் பிரதேச மக்கள் விமர்சிக்கின்றனர். காணி உறுதிகளை வழங்குவதில் காணப்படும் திறமையின்மை உள்ளூர் அரசியல்வாதியாலும் முக்கிய பிரச்சினையாகக் குறிப்பிடப்படுகின்றது. அரசியல் தொடர்புகளைக் கொண்ட நபர்களுக்கு காணி ஒதுக்கீடு விரைவாக நடைபெறுவதாகவும், சாதாரண மக்கள் கால தாமதங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### *உள்ளூர் உத்தியோகத்தர்கள் மற்றும் அரசியல்வாதிகளால் காணி அபகரிப்பு*

யுத்தத்தின்போது இந்தியாவிற்கு அகதிகளாக இடம்பெயர்ந்து பின்னர் அங்கு குடியேறியவர்களிடம் இருந்து சட்டவிரோதமாக காணிகளை அபகரித்துள்ளதாக முன்னாள் வவுனியா பிரதேச செயலாளர் ஒருவருக்கு[13] எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளது. அதேபோன்று வவுனியா மாவட்டத்திற்கான தற்போதைய பாராளுமன்றப் பிரதிநிதி பிரதேச செயலாளருடன் இணைந்து தனது அரசியல் கட்சியின் ஆதரவாளர்களுக்கு காணிகளை ஒதுக்கீடு செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

---

12 Displaced families, military and companies seek Menik Farm land | The Sundaytimes Sri Lanka. (n.d.). https://www.sundaytimes.lk/120930/news/displaced-families-military-and-companies-seek-menik-farm-land-14691.html

13 வவுனியா பிரதேச செயலாளருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு . (2019, April 4). https://www.virakesari.lk/article/53375

இந்தச் சம்பவங்கள் பிரதானமாக வவுனியா மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## இந்து தீவிரவாதத்தின் எழுச்சி

வட மாகாணத்தில் இந்துத்துவத்தின் எழுச்சியும் வேகமாகப் பரவிவரும் சிங்களமயமாக்கலும் மதத் தீவிரவாதம் அதிகரிப்பதற்குப் பங்களிப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்துத்துவா, குறிப்பாக தமிழ் - சைவ சமூகத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் மற்றும் தமிழ் சமூகத்தை உடைக்க முற்படும் ஒரு கருத்தியலாகப் பார்க்கப்படுகின்றது. சிவசேனா போன்ற இந்துத்துவா சித்தாந்தத்துடன் இணைந்த குழுக்களின் இருப்பு மற்றும் அதிகரித்து வரும் செல்வாக்கு, இந்து தீவிரவாதம் என்று கூறப்படும் வடிவத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்கும் மிதமான மதக் கருத்துக்களைக் கொண்டவர்களுக்கும் இடையே பதட்டத்தை அதிகரித்துள்ளது. வவுனியா மாவட்டத்தில் ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங்கம் (RSS) மற்றும் விஷ்வ ஹிந்து பரிஷத் போன்ற இந்தியக் குழுக்களால் செல்வாக்கு பெற்ற சிவசேனாவைப் போன்ற சித்தாந்தங்களைக் கொண்ட ஏனைய அமைப்புகளும் செயல்படுகின்றன. இந்த அமைப்புகள் பெரும்பாலும் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சமூகங்களை எதிர்க்கின்றன. இந்தக் குழுக்கள் பசு வதை விவகாரத்தில் முஸ்லிம் சமூகங்களைக் குறிவைத்து மத வன்முறையைத் தூ ண்டுவதில் பெயர் பெற்றவை. எவ்வாறாயினும், தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரை கால்நடைகளை வளர்ப்பதும் அவற்றை விற்பதும் ஒரு பொதுவான பொருளாதார நடைமுறை என்பது குறிப்பிடத்தக்கது. முஸ்லிம்கள் மாட்டிறைச்சி சாப்பிடுவதனால் இந்த நடைமுறை சிவசேனாவின் எதிர்ப்பிற்கு வழிவகுத்தது. எவ்வாறாயினும், மாட்டிறைச்சி உண்பதற்காக முஸ்லிம்களை மட்டும் தனிமைப்படுத்துவது பிரச்சினைக்குரியது என்பதுடன் வேண்டுமென்றே முன்னெடுக்கப்படும் செயற்பாடும் ஆகும். சிவசேனாவின் செயற்பாடுகள் மேலும் தீவிரமடைந்து வருவதாகவும், இது எதிர்காலத்தில் மத மோதல்களை உருவாக்குமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவசேனா போன்ற இந்து குழுக்களுக்கும் பௌத்த பிக்குகளுக்கும் இடையேயான கூட்டிணைப்பு சைவ, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சமூகங்களின் மத சுதந்திரத்தின் எதிர்கால நிலை குறித்து கவலைகளை எழுப்பியுள்ளது. அண்மையில் முல்லைத்தீவு குருந்தூர்மலை விவகாரத்தில்[14] இந்தக் குழுக்கள் வழங்கிய ஆதரவைப் போன்று வவுனியா மாவட்டத்தில், குறிப்பாக சர்ச்சைக்குரிய தளங்களில் எழக்கூடிய இதுபோன்ற பிரச்சினைகள் குறித்தும் கவலைகள் உள்ளன. மேலும், நான்கு வருடங்களுக்கு முன்னர், சிங்கள அரசியல்வாதி ஒருவரின் ஆதரவுடன் இப்பகுதியில் இந்து - பௌத்த சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சங்கத்தின் மூலம் பௌத்த மத நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மோதல்கள் மற்றும் சர்ச்சைக்குரிய தளங்களில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளில் அத்தகைய சங்கம் எவ்வாறு செல்வாக்கு

14 An attempt to ward off international pressure? Clandestine meeting between Buddhist monks and Shiv Sena in Kurunthurmalai. (2024, January 18). https://www.tamilguardian.com/content/attempt-ward-international-pressure-clandestine-meeting-between-buddhist-monks-and-shiv-sena

செலுத்தும் என்பது குறித்தும் உள்ளூர் மக்களிடையே கவலைகள் உள்ளன.

மேலும், சைவ மக்களிடையே மாறிவரும் வழிபாட்டு முறைகள் குறித்தும் கவலைகள் எழுந்துள்ளன. இலங்கையில் முருகப்பெருமானும் சிவனும் பாரம்பரியமாக சைவர்கள் வழிபடும் முதன்மைக் கடவுள்கள் என்று நேர்காணல் ஒன்றில் குறிப்பிடப்பட்டது. எனினும், இந்தியக் கலாச்சாரத்தின் வளர்ந்து வரும் செல்வாக்கினால் வழிபடக்கூடிய தெய்வங்கள் மற்றும் வழிபாட்டு மொழிகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இது இலங்கையில் பாரம்பரிய சைவ கலாச்சாரத்தை நீர்த்துப்போகச் செய்வதாக சிலர் கருதுகின்றனர்.

## ஏனைய அறிக்கையிடப்பட்ட வழக்குகள்

### வழிபாட்டுத் தலங்களைப் பதிவுசெய்தல்

ரம்பை வெட்டி கிராமத்தில் சைவ ஆலயத்தைப் பதிவு செய்து புனரமைப்பதற்கு அனுமதி வழங்குமாறு வவுனியா தெற்கு பிரதேச செயலகம், பிரதேச சபை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. எனினும், மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும் எந்தவிதமான அனுமதியோ சட்டப்பூர்வமான பதிவோ பெறப்படவில்லை. இது செயல்முறையில் தாமதங்கள் அல்லது பாரபட்சம் பற்றிய கவலைகளை எழுப்புகின்றது. நேர்காணல் ஒன்றின்போது ஓமந்தையைச் சேர்ந்த சைவ மதகுரு ஒருவர், வழிபாட்டுத் தலங்களைக் கையாள்வதில் இரட்டை நிலை இருப்பதைக் கண்டு விரக்தியை வெளிப்படுத்தினார். பௌத்த விகாரையை நிர்மாணிக்கும்போது அல்லது புனரமைக்கும்போது அரசியல் ஆதரவு செயற்பாடுகளை இலகுவாக்குவதால் அவ்வாறான காலதாமதங்களை எதிர்நோக்குவதில்லை எனவும், சைவ ஆலயங்களுக்கான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் அரசாங்கம் ஒவ்வொரு கட்டத்திலும் தடைகளை ஏற்படுத்துவதாகத் தோன்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார். சைவக் கோவிலைக் கட்டுவதையும், பதிவு செய்வதையும் தடுக்கும் முயற்சிகள் வேண்டுமென்றே நடந்து வருவதாகவும், தனது சொந்தக் கோவிலை உதாரணம் காட்டி, அனுமதி பெற முயற்சித்தும் பலனில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### கோமரசன்குளத்தில் மதச் சிலைகள் தொடர்பாக மோதல்

வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட கோமரசன்குளம் கிராமத்தில் வ/பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் பாடசாலையில் சரஸ்வதி தேவி மற்றும் மேரி மாதா சிலைகளை நிறுவுவதற்கு தீர்மானித்ததில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. உள்ளூர் கத்தோலிக்க மதகுரு ஒருவர் பாடசாலை நிர்வாகத்திற்கு கடிதம் எழுதி, இந்தச் சிலைகளை நிறுவுவது கத்தோலிக்க மற்றும் சைவ சமூகங்களுக்கு இடையே பதட்டத்தை ஏற்படுத்தும் என்று கவலை தெரிவித்தார். வரலாற்று ரீதியாக அது கத்தோலிக்கர்கள் அதிகம் வசிக்கும் கிராமம் என்பதை வலியுறுத்திய கிராமவாசிகளின் கோரிக்கைகளின் பேரில் அவர் அவ்வாறு செயற்பட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.[15]

15 வவுனியா பாடசாலை ஒன்றில் சரஸ்வதி மற்றும் மாதா சிலை அமைக்க எடுத்த முயற்சியால் குழப்பநிலை - தமிழ்வின். (2024, August 9). Tamilwin. https://tamilwin.com/article/god-statue-issue-in-vavuniya-komarankulam-school-1723153275

# அரச செயற்பாட்டாளர்களின் பங்கு மற்றும் ஈடுபாடு

## உள்ளூர் அரச உத்தியோகத்தர்களும் முஸ்லிம்களுக்கு எதிரான பாகுபாடும்

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் உதவியுடன் வவுனியா சாளம்பைக்குளத்தில்[16] குடியேற்றப்பட்ட முஸ்லிம் சமூகம் வவுனியா நகர சபையின் நடவடிக்கைகளால் தொடர்ந்து சவால்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.[17] ஒவ்வொரு மாதமும் சுமார் 30 தொன் குப்பைகள் இந்தக் குடியிருப்புக்கு அருகில் கொட்டப்படுவதால், குடியிருப்பாளர்களுக்கு கடுமையான சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஏற்படுகின்றது. நகர சபை நிர்வாகத்திடம் பலமுறை முறையிட்டும் இப்பிரச்னைக்குத் தீர்வு காணப்படவில்லை. குப்பை கொட்டுவது நீண்ட காலமாக நடந்து வருகின்றது. அரசியல் சூழ்நிலை மற்றும் 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து எந்தவொரு பயனுள்ள தீர்வையும் செயல்படுத்துவது ஸ்தம்பித்துள்ளது. இப்பிரச்னைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் நடத்தப்பட்டும் கழிவு முகாமைத்துவப் பிரச்னைக்கு இதுவரை உரிய தீர்வு காணப்படவில்லை.

## தொல்லியல் திணைக்களம்

தொல்லியல் திணைக்களம் சிறுபான்மையினரை விட பெரும்பான்மை சமூகத்தின் நலன்களை ஆதரிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சிவராத்திரி பூஜையின் போது சைவ பக்தர்களுக்கு தண்ணீர் மறுக்கப்பட்டதாகக் கூறப்படும் வெடுக்குநாறி ஆதி சிவன் கோவிலில் நடந்த சம்பவம் இதற்கான ஒரு உதாரணம் ஆகும். திணைக்களத்தின் நடவடிக்கைகள் பௌத்தர்கள் மற்றும் பிக்குகளுக்குச் சாதகமாகத் தோன்றுகின்றன.[18] சைவ மக்கள் இப்பகுதிகளுக்கு வழிபாட்டிற்காகச் செல்லவும் தடை விதிக்கப்படுவதாக திணைக்களம் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. வழிபாட்டுத் தலங்கள் மீதான திடீர் கட்டுப்பாடுகள் மற்றும் தொல்பொருட்கள் கண்டுபிடிப்பு குறித்து சைவ சமூக உறுப்பினர்களுடனான நேர்காணல்களில் கவலைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவை அவர்களின் மதம் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தைக் குறைத்து மதிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்று அவர்கள் நம்புகிறார்கள்.

## காவல்துறை மற்றும் இராணுவத்தின் தலையீடு

மத விவகாரங்களில் காவல்துறையின் தலையீடு சம்பந்தப்பட்ட தரப்பினரைப் பொறுத்து மாறுபடும் என்பது குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலத்தில் காவல்துறையின் நடவடிக்கைகள்,

16 சாளம்பைக்குளம் குப்பை மேடு விவகாரம் - 2வது நாளாகத் தொடரும் மக்களின் போராட்டம் . (2020, January 23). https://www.virakesari.lk/article/73907

17 Health of Uni students, villagers threatened by Vavuniya garbage dump. (2017, February 22). Times Online. https://sundaytimes.lk/online/news/health-of-uni-students-villagers-threatened-by-vavuniya-garbage-dump/18-1017343

18 Sinhala Buddhist monks call on Sri Lankan police to halt Shivarathri at Vedukkunaari Temple. (2024, March 7). https://www.tamilguardian.com/content/sinhala-buddhist-monks-call-sri-lankan-police-halt-shivarathri-vedukkunaari-temple

குறிப்பாக சிறுபான்மை சமூகங்கள் சம்பந்தப்படும் போது மத சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை மீறுவதாக விமர்சிக்கப்பட்டது. இந்த ஆண்டு தொடக்கத்தில் வெடுக்குநாறி ஆதி சிவன் கோவிலுடன் தொடர்புடைய கைதுகள் போன்று, பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த காவல்துறை உத்தியோகத்தர்கள் சிறுபான்மையினருக்கு எதிரான பாரபட்சமான போக்கை வெளிப்படுத்தக்கூடும் என்ற சந்தேகம் அதிகரித்து வருகின்றது. வவுனியாவில் பிரிவினைவாத சக்திகளின் மீள் ஒருங்கிணைப்பைத் தடுக்கும் வகையில் இராணுவத்தினர் விழிப்புடன் இருப்பதாகவும், கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அனைத்து நடவடிக்கைகளையும் புலனாய்வுத் துறை உன்னிப்பாகக் கண்காணிக்க வழிவகுத்தது. மேலும் உத்தியோகபூர்வ கடமைகளுக்கு அப்பாற்பட்டு கட்டுமானப் பணிகள் மற்றும் விவசாயம் போன்ற சிவில் நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபடுவதும் சமூகங்களால் கவனிக்கப்படுகின்றது.

தொல்பொருள் இடங்கள் தொடர்பான நடவடிக்கைகளில் தொல்பொருளியல் திணைக்களம் பாதுகாப்பிற்கு எனக் கூறி இராணுவத்தை அதிகளவில் ஈடுபடுத்துகின்றது. இராணுவமயமாக்கல் தற்போது வெளிப்படையாகக் குறைந்து இருந்தாலும், பௌத்தச் சின்னங்கள் வைக்கப்பட்டுள்ள காடுகளுக்குள் இராணுவ முகாம்களை விரிவுபடுத்துவது இடம்பெறுகின்றது. இந்த நடவடிக்கைகளில் இராணுவத்தின் பங்கு, தொல்பொருள் பாதுகாப்பு என்ற போர்வையில் சிறுபான்மை மத தலங்கள் மீதான அத்துமீறல் பற்றிய அச்சத்தை எழுப்பியுள்ளது.

வெடுக்குநாறி ஆதி சிவன் கோவில் போன்ற மத விவகாரங்களில் காவல்துறை மற்றும் இராணுவத்தின் பிரசன்னம், பாதுகாப்புப் படைகளுக்கும் தொல்லியல் திணைக்களத்திற்கும் இடையேயான ஒத்துழைப்பைப் பற்றிய கருத்தைத் தீவிரப்படுத்தியுள்ளது. மார்ச் 8, 2024 அன்று[19] சிவராத்திரி பூஜையின் போது விசேட அதிரடிப் படையினர் உட்பட 150 க்கும் மேற்பட்ட காவல்துறையினர், மற்றும் இராணுவத்தினர் வெடுக்குநாறி ஆதி சிவன் கோவிலைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். இவர்கள் சைவ பக்தர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்ததாகக் கூறப்படுகின்றது. இம்மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் தொல்பொருளியல் திணைக்களத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பை எடுத்துக்காட்டும் பல நிகழ்வுகளும் உள்ளன. உதாரணமாக, ஜூன் 2023 ஆம் ஆண்டில் பட்டரைப்பிரிந்த குளம் அம்மன் கோவிலை கிராம மக்கள் புனரமைப்பதில் ஈடுபட்டிருந்தனர். சம்பவ இடத்திற்குச் சென்ற புலனாய்வுப் பிரிவினர் தொல்பொருளியல் திணைக்களத்திற்கு அறிவித்ததை அடுத்து, வன்னி பிராந்திய தொல்பொருளியல் திணைக்களம்[20] நடவடிக்கை எடுத்தது. தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் காவல்துறையுடன் வந்து சைவக் கடவுள்கள் சிலைகளை அகற்றிவிட்டு கட்டுமானப் பணிகளை நிறுத்தினர். காவல்துறையும் அதிகாரிகளும் புனரமைக்கும் பணிகளில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வதாக அச்சுறுத்தினர், கோவிலில் வழிபாட்டைத் தடைசெய்தனர் மற்றும் ஏதேனும் மீறல்கள் இடம்பெற்றால் சாத்தியமான

---

19 Sri Lankan police unleash violence at Vedukkunaari during Shivarathri: MP assaulted, 8 Tamils arrested. (2024, March 8). https://www.tamilguardian.com/content/sri-lankan-police-unleash-violence-vedukkunaari-during-shivarathri-mp-assaulted-8-tamils

20 Trend Analysis of Violence Against Christians in Sri Lanka. (2023). https://www.minormatters.org/storage/app/uploads/public/665/577/799/6655777992a98857146076.pdf

கைதுகள் குறித்தும் எச்சரித்தனர். முறையான பதிவுகள் இல்லாவிட்டாலும், கிராம மக்கள் இந்தச் சிறிய சைவ கோவிலில் பல ஆண்டுகளாக வழிபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. செப்டம்பர் 1, 2024 அன்று புத்த விகாரைகள் மற்றும் ஸ்தூபிகளின் கட்டுமானத் திட்டங்களில் முப்படை மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பங்களிப்புகளை பாதுகாப்பு அமைச்சு வெளிப்படையாக ஒப்புக்கொண்டது. அனுராதபுரத்தில் சதாஹிரு ஸ்தூபி, முல்லைத்தீவில் குருந்தி விகாரை, அம்பாறையில் தீகவாப்பிய ரஜமஹா விகாரை மற்றும் லஹுகலவில் நீலகிரி ஸ்தூபி ஆகியவற்றை நிர்மாணிப்பதில் அவர்களின் பங்களிப்பை அமைச்சு குறிப்பிட்டது. வவுனியா சபுமல்கஸ்கட ரஜமஹா விகாரையில் புனரமைக்கப்பட்ட ஸ்தூபியின் சிகரத் திறப்பு விழாவின் போது இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.[21]

தொல்பொருளியல் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றின் தொடர்ச்சியான நில அபகரிப்பு நடவடிக்கைகள் மனித உரிமைகளை அதிகளவு மீறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் இராணுவத்தினராலும் ஏனைய அரச செயற்பாட்டாளர்களாலும் ஆதரிக்கப்படும் இந்த நடவடிக்கைகள் வவுனியாவில் திட்டமிட்ட முறையில் சமூகங்களை ஓரங்கட்டுவதற்குப் பங்களிப்பதாக அவதானிக்கப்படுகின்றது. மேலும் பொழுதுபோக்கு இடங்களுக்கு காணி ஒதுக்கீடு செய்வதிலும் அனுமதிப் பத்திரங்களை வழங்குவதிலும் ஏனைய அரச திணைக்களங்களின் பாரபட்சமற்ற தன்மை குறித்தும் சந்தேகம் எழுந்துள்ளது. மார்ச் 2023 ஆம் ஆண்டு நடந்த ஒரு சம்பவத்தில், பல ஆண்டுகளாக சைவ வழிபாட்டுத் தலமாக இருந்த ஒரு குன்றிலிருந்து கருங்கல்லை எடுக்க புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் உள்ளூர்வாசிகளின் எதிர்ப்பையும் மீறி தனிநபர் ஒருவருக்கு அனுமதி வழங்கியது. அக்குன்றில் தங்களின் மத வழிபாட்டு முறைகளைக் கருத்தில் கொள்ளாமல் இந்த அனுமதி வழங்கப்பட்டதாக கிராம மக்கள் கூறினர்.[22]

---

21 Defence Secretary unveils the Pinnacle of restored Sapumalgaskada Stupa in Vavunia. (2024, September 1). Defence.lk. https://www.defence.lk/Article/view_article/28122

22 வவுனியாவில் கருங்கல் அகழ்விற்கு பொதுமக்கள் எதிர்ப்பு!! (2023, March 10). https://www.vavuniyanet.com/news/350875/%e0%ae%b5%e0%ae%b5%e0%af%81%e0%ae%a9%e0%ae%bf%e0%ae%af%e0%ae%be%e0%ae%b5%e0%ae%bf%e0%ae%b2%e0%af%8d-%e0%ae%95%e0%ae%b0%e0%af%81%e0%ae%99%e0%af%8d%e0%ae%95%e0%ae%b2%e0%af%8d-%e0%ae%85%e0%ae%95-2/

## ஏனைய பொருத்தமான காரணிகள், அவதானிப்புகள் மற்றும் எதிர்காலப் போக்குகள்

### ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின் தாக்கம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் அப்பிரதேசத்தில் உள்ள பௌத்த அமைப்புகள் மற்றும் பௌத்த பிக்குகளிடம் இருந்து குறிப்பிடத்தக்க செல்வாக்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் சிவசேனா போன்ற இந்துத்துவா சித்தாந்தங்களைக் கொண்ட குழுக்கள், எதிர்வரும் இரண்டு தேர்தல்களிலும் ஈடுபடும் எதிர்பார்ப்புடன், அரசியல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. மாவட்டத்தின் தற்போதைய நிலைமை சிறுபான்மை மதக் குழுக்களுக்கும் மதத் தலைவர்களுக்கும் குறிப்பாக தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பவர்களுக்கு சாத்தியமான சவால்களை முன்வைப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தேர்தல் நெருங்கும்போது இந்தக் குழுக்கள் அதிக தடைகளையும் அழுத்தங்களையும் சந்திக்க நேரிடும். தமிழ் பொது வேட்பாளருக்கான பிரச்சாரம் தீவிரமடைந்து வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது. இந்த மூலோபாயம் இலங்கையர்களிடையே பிளவுகளை உருவாக்குவதற்கும் இன - மத பெரும்பான்மை வேட்பாளர்(களின்) வாக்கு வங்கியை நீர்த்துப்போகச் செய்வதற்குமான முயற்சியாக சிலரால் பார்க்கப்படுகின்றது.

இந்தத் தேர்தல் தமிழ் சமூகத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது என தமிழர்களின் அபிலாஷைகள் அவர்களின் மத அடையாளம் மற்றும் நம்பிக்கைகளைப் பாதுகாப்பதுடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளது. இந்த முறை அதிக வேட்பாளர்கள் போட்டியிடுவதால், பலர் தங்கள் வாக்காளர் எண்ணிக்கையை உயர்த்த மதத் தலைவர்களின் ஆதரவை நாடுவார்கள் என்று கருதப்படுகின்றது. மேலும் வாக்காளர்களிடம் செல்வாக்குச் செலுத்துவதற்காக, கோவிட்-19 காலத்தில் இடம்பெற்ற கட்டாயத் தகனம் போன்ற கடந்த காலப் பிரச்சினைகளை அரசியல்வாதிகள் மீண்டும் கிளப்பி வருவதாகக் கூறப்படுகின்றது. இந்த உத்தி பாராளுமன்றத் தேர்தலிலும் தொடரும் என்று பலராலும் கணிக்கப்பட்டுள்ளது. பிராந்திய மற்றும் மத அடிப்படையில் வாக்காளர்கள் குறிவைக்கப்படலாம் என்பதுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் மதத்தைப் பயன்படுத்தியும் உணர்ச்சிகளைத் தூண்டியும் ஆதரவைப் பெறுவார்கள் என்ற கவலை உள்ளது.

### ஊடகம்

வவுனியா வடக்கில் உள்ள பிராந்திய ஊடகங்கள் புலம்பெயர் மக்களால் நிதியளிக்கப்பட்ட அமைப்புகளால் செல்வாக்கு செலுத்தப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. அவை பிராந்தியத்தில் குறிப்பிடத்தக்க இருப்பைக் கொண்டுள்ளன. எனினும், இந்த ஊடக நிறுவனங்கள் பெரும்பாலும் ஊடக நெறிமுறைகளைப் பின்பற்றுவதில்லை. ஊடக நெறிமுறை பின்பற்றப்படாமை ஒரு தீவிரமான பிரச்சனையாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் இது பக்கச்சார்பான அறிக்கையிடல், தவறான தகவல் மற்றும் சமூகத்தில் இருக்கும் பதட்டங்களை குறிப்பாக மத சமூகங்கள் தொடர்பான உணர்ச்சிகரமான பிரச்சினைகளை மோசமாக்குவதற்கு வழிவகுக்கும். மேலும், வெறுப்புப் பேச்சுக்களை பரப்புவதில் சமூக ஊடகங்களின் பங்கு மற்றும் அதன் செல்வாக்கு

வவுனியாவில் அதிகம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்டத்தில் உள்ள சில பிரபலமான அரசியல்வாதிகள் தேர்தல் பிரச்சாரங்களின்போது மட்டும் பல ஃபேஸ்புக் பக்கங்களை நிர்வகிக்கும் நடவடிக்கை, மூலோபாய சமூக ஊடகப் பிரச்சாரத்திற்கான முக்கிய உதாரணம் எனக் கூறலாம். இந்த ஊடகப் பிரிவுகள் தேர்தலின்போது முழுமையாகச் செயல்படுகின்றன. அதிக பயனர்களை, குறிப்பாக சமூக ஊடகங்களை அதிகம் பயன்படுத்தும் இளைஞர்களைச் சென்றடையக்கூடிய திறனை இவை கொண்டுள்ளன. ஆன்லைனில் குறிப்பிட்ட உள்ளடக்கத்தை விளம்பரப்படுத்துவதற்குப் பதிலாக கிராம மக்களுக்கு நிவாரணத்தையும் உதவியையும் வழங்குவது போன்ற அரசியல் ஆதாயங்களுடன் சமூக ஊடகப் பிரச்சாரம் பெரும்பாலும் பிணைக்கப்பட்டுள்ளது.

## பெண்கள் மீதான கட்டுப்பாடுகள்

பெண்களையும் அவர்களின் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தை நிலைநிறுத்தும் திறனையையும் பாதிக்கும் பல தொடர்ச்சியான கட்டுப்பாடுகள் உள்ளன. மாதவிடாய் போன்ற சில நேரங்களில் பெண்கள் சைவ கோவிலிலும், பூஜை அறைகளிலும் நுழைவதைத் தடுக்கும் கட்டுப்பாடுகள் இன்னும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இதேபோன்று முஸ்லிம் வழிபாட்டுத் தலங்கள் பெண்களுக்கு சில கட்டுப்பாடுகளை விதிப்பதாகக் கூறப்படுகின்றது. எனினும் சில முஸ்லிம் பெண்கள் இவற்றை பிரச்சனைக்குரியதாகக் கருதாமல் அவற்றை தங்கள் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்வதுடன் அவற்றை எதிர்ப்பதில்லை. மேலும், தற்போது பல பெண்கள் ஆண்களுடன் சேராமல் சுதந்திரமாக தங்கள் மதத்தைப் பின்பற்றுவதற்குப் பழகிவிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவ தேவாலயத்தைச் சேர்ந்த கன்னியாஸ்திரி ஒருவருடனான நேர்காணலில், பெண்கள் தங்கள் மத ரீதியான வகிபாகங்களில் கலாச்சார மற்றும் சமூகக் கட்டுப்பாடுகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. பெண்கள் பெரும்பாலும் வெளிப்படையாகப் பேசவோ, வழிபாடுகளை முன்னெடுக்கவோ அல்லது தேவாலயத்தில் சில பொறுப்புகளை ஏற்கவோ முடியாது என்றும், பெண் மதத் தலைவராக மாறுவது மிகவும் கடினமான செயல் என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும், பெண் மதத் தலைவர்களை வாய்மொழி மற்றும் உடல்ரீதியான துன்புறுத்தலில் இருந்து பாதுகாப்பதற்கான சட்டங்களின் அவசியத்தை வலியுறுத்திய அவர், பெண் மதத் தலைவர்கள் ஆண் மதத் தலைவர்களுக்கு நிகரான மரியாதை மற்றும் உரிமைகளுடன் நடத்தப்படுவதை உறுதிசெய்ய இந்த பாதுகாப்புகள் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## மத அடையாளங்கள் சிதைந்துவிடும் என்ற பயம் மற்றும் மதச் சின்னங்கள் மீதான தாக்குதல்கள்

மத சமூகங்களின் உறுப்பினர்களுடன் வெளிப்படையான மோதலில் ஈடுபடுவதற்குப் பதிலாக, மத அடையாளங்களைச் சிதைப்பதன் மூலம் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தைக்

குறிவைக்கும் முயற்சிகளின் போக்கு அதிகரித்து வருகின்றது. வவுனியாவில் தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் பௌத்த சமய அலுவல்கள் அமைச்சு என்பன பல சந்தர்ப்பங்களில் புராதன இடங்கள் ஏனைய மதக் குழுக்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தன என்பதைக் கவனத்தில் கொள்ளாமல் அவற்றை பௌத்த சமயத்திற்குச் சொந்தமானவை என அடையாளம் கண்டுள்ளன. சைவக் கோவில்களில் காணப்படும் கடவுள்களின் சிலைகளும் சூலம் போன்ற மதச் சின்னங்களும் சைவ பக்தர்களிடம் ஆழமான ஆன்மீக முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன. அவர்கள் சிலை வழிபாட்டுடன் வலுவான மன மற்றும் உடல் தொடர்பைக் கொண்டிருக்கின்றார்கள். எனினும், மதங்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டும் பல்வேறு தரப்பினரும், சில சமயங்களில் அரசாங்க அதிகாரிகளின் ஆதரவுடன், இந்தச் சிலைகள் மற்றும் சின்னங்களை உடைப்பது அல்லது அழிப்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய வன்முறை மற்றும் நாசகார செயல்கள் பக்தர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்துகின்றன. ஏனெனில் அவை அவர்களின் மத மற்றும் கலாச்சார அடையாளத்தின் மையத்தின் மீது வேண்டுமென்றே முன்னெடுக்கப்படும் தாக்குதல்களாகக் காணப்படுகின்றன. மேலும், சமய இடங்கள் மற்றும் நிலங்களை "அபகரித்தல்" என்பது புனிதமான இடங்களை பௌதீக ரீதியாகக் கையகப்படுத்துவது மட்டுமல்லாமல், இந்தச் சமூகங்களின் மத மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை அழிக்கும் பரந்த முயற்சியாகவும் கருதப்படுகின்றது. மறுபுறம், கோவில்களை நிர்மாணிப்பதற்கு நிதியளிப்பது மற்றும் சைவ சமூகத்திற்கு ஆதரவாக சிவலிங்கங்களைக் கொண்டு வருவது போன்ற புலம்பெயர்ந்த தமிழர்களின் தொடர்ச்சியான ஈடுபாடு பதட்டங்களுக்கு பங்களிக்கும் காரணியாக குறிப்பிடப்படுகின்றது. அரசாங்கம் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்கள் ஈடுபாட்டைத் தொடர்வதால், மாவட்டத்தில் மதச் சிலைகள் மற்றும் சின்னங்கள் தொடர்பான பதட்டங்கள் நீடிக்கலாம் என்ற கவலைகள் தொடர்கின்றன.

## வவுனியா மீது அண்டை மாவட்டங்களின் செல்வாக்கு

வவுனியாவில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் நிலை மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற அண்டை மாவட்டங்களில் இடம்பெறும் நிகழ்வுகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. அங்கு பல்வேறு மத சமூகங்கள் வெவ்வேறு வழிகளில் தங்கள் செல்வாக்கை உறுதிப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. உதாரணமாக, யாழ்ப்பாணத்தில் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பது, மன்னார் போன்ற பகுதிகளில் சிவலிங்கங்களை நிறுவுவது ஏனைய மத சமூகங்களிடம் தங்கள் பிராந்திய இருப்பைக் காட்டுவதற்கான அடையாள முயற்சிகளாகப் பார்க்கப்படுகின்றது. இது வவுனியாவிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

# நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகள்

## சிவில் சமூகத்திற்கான பரிந்துரைகள்

### 1. FoRB தொடர்பான சிக்கல்களில் மேம்படுத்தப்பட்ட பொது கலந்துரையாடல்கள்

தவறான புரிதல்களை தெளிவுபடுத்துவதற்கும் மத மாற்றம் போன்ற உணர்வுப்பூர்வமான பிரச்சனைகள் தொடர்பான சவால்களுக்குத் தீர்வு காண்பதற்கும் FoRB பற்றிய பொது கலந்துரையாடல் தேவை. மத மாற்றம் போன்ற பிரச்சனைகள் தொடர்பான தவறான எண்ணங்கள் மற்றும் சவால்களைச் சமாளிக்க, அரசு சாரா நபர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பது அவசியம் ஆகும்.

### 2. சர்வ மத மன்றங்களின் பங்கை வலுப்படுத்துதல்

தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உள்ளூர்மயமாக்கல் முயற்சிகளில் அதிக வெளிப்படைத்தன்மைக்கான தேவை உள்ளது. மேலும் வளங்களின் நியாயமான ஒதுக்கீடு மூலம் சர்வ மத மன்றங்களின் பங்கு பலப்படுத்தப்பட வேண்டும். இந்த மன்றங்களுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கப்பட வேண்டும், சமூகங்களுக்கு இடையேயான பதட்டங்களின் போது அவர்கள்  வலுவான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் உள்ளூர் மற்றும் அடிமட்டக் குழுக்களுடன் அவர்களின் தேவைகள், சவால்கள் மற்றும் நிலைத்தன்மைக்கான தடைகள் குறித்து கலந்துரையாடுவதுடன் இந்த மன்றங்கள் செயலில் இருப்பதையும் காலப்போக்கில் கலைக்கப்படாமல் இருப்பதையும் உறுதிசெய்ய பொருத்தமான நிதி மற்றும் மானியங்களையும் ஆராய வேண்டும்.

### 3. பொருளாதாரப் பிரச்சினைகள் மதங்களுக்கு இடையேயான மோதலுக்கான ஊக்கியாக இருப்பதை அங்கீகரித்தல்

மாவட்டத்தில் உள்ள வறுமை மற்றும் பொருளாதாரக் கவலைகளை நிவர்த்தி செய்ய ஒருங்கிணைந்த முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். அவை பெரும்பாலும் மோதல்களுக்கான மூல காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. வெவ்வேறு மத சமூகங்களின் பலவீனம் வளப் பகிர்ந்தளிப்பின் போது சுரண்டப்படுகின்றது. அரசியல் ஆதாயத்திற்காக மத அடிப்படையில் மோதலைத் தூண்டும் அரசியல் மற்றும் மதவாதிகளுக்கு இடமளிக்கின்றது.

### 4. சிவில் சமூகத்தின் தொடர்ச்சியான கண்காணிப்பு, ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட முன்னெச்சரிக்கை வழிமுறைகள்

பொருத்தமான ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆய்வாளர்களால் மாவட்டத்தில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திர மீறல்கள் மற்றும் தொடர்புடைய வளர்ச்சிகள் பற்றிய மேம்படுத்தப்பட்ட ஆவணப்படுத்தல்கள்  தேவை. உதாரணமாக, இந்துத்வாவை ஊக்குவிக்கும் குழுக்களின் எழுச்சி அல்லது இந்துத்வா மற்றும் பௌத்த அமைப்புகளுக்கு இடையேயான ஒத்துழைப்பைக் கவனமாகக் கண்காணித்து, ஏனைய சமூகங்கள் மீதான அவற்றின் நீண்டகாலத் தாக்கங்கள் மற்றும் மாவட்டத்தில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும். இத்தகைய கண்காணிப்பு முயற்சிகளுடன், வெளிப்படுத்தப்படும் போக்குகள்

மற்றும் வடிவங்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் சாத்தியமான FoRB மீறல்களை நிவர்த்தி செய்ய தொடர்புடைய நிறுவனங்களால் முன்கூட்டியே எச்சரிக்கை மற்றும் பதில் வழிமுறைகள் செயல்படுத்தப்பட வேண்டும்.

5. FoRB தொடர்பான மோதல்களில் ஊடகங்களின் பங்கை எதிர்கொள்ளல்

FoRB தொடர்பான பதட்டங்களை அதிகரிப்பதில் சமூக ஊடகங்களின் வளர்ந்து வரும் பங்கைக் கருத்தில் கொண்டு, பிராந்திய உண்மைச் சரிபார்ப்பு வழிமுறைகளை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சரியான நேரத்தில் உண்மைச் சரிபார்ப்பை உறுதி செய்வதற்கும், தவறான தகவல் பரவுவதைத் தடுப்பதற்கும், வன்முறைக்கான சாத்தியக்கூறுகளைக் குறைப்பதற்கும் பொறுப்புள்ள தனிநபர்கள் மற்றும் அமைப்புகளை இவை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

உண்மைச் சரிபார்ப்புக்கு மேலதிகமாக, வடக்கு மற்றும் கிழக்கில் நிகழும் சம்பவங்கள் தொடர்பான மட்டுப்படுத்தப்பட்ட ஊடக அறிக்கையிடலை மேம்படுத்துவதற்கு பிராந்தியத்தில் உள்ள இளம் ஊடகவியலாளர்களுக்கு பயிற்சி அளிப்பது அவசியமாகும். நெறிமுறை அறிக்கையிடல் மற்றும் செய்திகளைப் பொறுப்புடன் பகிர்தல் போன்ற தேவையான ஊடகத் திறன்களுடன் அவர்களைத் தயார் செய்வதும் இதில் அடங்கும்.

## அரச செயற்பாட்டாளர்களுக்கான பரிந்துரைகள்

1. தகவல் அறியும் உரிமை மற்றும் சட்ட வழிமுறைகள் குறித்த சமூக விழிப்புணர்வு

நிலத் தகராறுகள், நில அபகரிப்பு மற்றும் ஆக்கிரமிப்பு ஆகியவை இடம்பெறும் நிலையில், இந்தப் பிரச்சினைகள் பற்றிய தகவல்களை அணுகுவதற்கும் தெளிவுபடுத்துவதற்கும் கிடைக்கக்கூடிய வழிமுறைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை (RTI) பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வும் இதில் அடங்கும். இது நில வழக்குகள் பற்றிய தகவல்களைப் பெறவும், சட்ட உதவியைப் பெறுவது குறித்த சிறந்த விழிப்புணர்வைப் பெறவும் உதவுகின்றது. நிலத் தகராறுகள் மற்றும் ஆக்கிரமிப்பு வழக்குகளைத் தீர்ப்பதில் யாரை அணுக வேண்டும் என்பதை சமூகங்கள் அறிந்திருப்பது அவசியம் ஆகும்.

2. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

பாடசாலை பாடத்திட்டத்தை திருத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லது குறைந்தபட்சம் ஆசிரியர்களுக்கு மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் வழிகாட்டுதலின் கீழ், மாணவர்கள் மத்தியில் FoRB தொடர்பான புரிதலை ஏற்படுத்த பாடசாலைகள் உதவ வேண்டும். இதனை திறம்பட நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்ய அரசாங்கத்தின் உதவியுடன், அரச தலையீடுகள் இன்றியும் மற்றும் செயற்திட்டங்களின் மூலமாகவும் அடைய முடியும்.

## 3. சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கான ஆதரவு

FoRB தொடர்பான திட்டங்கள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சுகள், அதிகார சபைகள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் தேவையான ஆதரவை வழங்க வேண்டும். FoRB தொடர்பான பிரச்சினைகளில் சிவில் சமூகம் வழங்கும் திறன் மேம்பாட்டு முயற்சிகளுக்கு அரச உத்தியோகத்தர்கள் தயாராக இருக்க வேண்டும்.

# பின்னிணைப்பு - அரைக் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் வழிகாட்டுதல்

## NCEASL இன் நிலை பற்றிய ஆய்வு - மட்டக்களப்பு மற்றும் வவுனியா

எனது பெயர் ________. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் வவுனியா மற்றும் மட்டக்களப்பில் மத சுதந்திரம் மற்றும் நம்பிக்கைகளின் நிலை குறித்த ஆய்வில் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணியை (NCEASL) நான் ஆதரிக்கிறேன். இந்த மாவட்டங்களில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்திற்கான சவால்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஆய்வை முன்னெடுப்பதன் மூலம் இந்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். நீங்கள் இந்தப் பகுதியில் உள்ள சமூகங்களுடன் பணிபுரிந்த முக்கியமான பங்குதாரராக இருப்பதாலும், இந்த ஆய்வுக் கூறுகளுக்கு மதிப்புமிக்க உள்ளீட்டை வழங்கக்கூடியவர் என்பதாலும் நான் உங்களுடன் இந்த நேர்காணலை நடத்துகின்றேன். அனைத்து மத சமூகங்களுக்கும் மத சுதந்திரத்தின் நிலையை முன்னேற்றுவதற்கு இந்த மாவட்டத்தில் செயற்பாடுகளை முன்னெடுக்க நீங்கள் வழங்கும் தகவல்கள் NCEASLக்கு முக்கியமானதாக இருக்கும்.

அடிப்படை விதிகள்:

1. **ரகசியம் பேணுதல்:** உங்கள் பெயர் மற்றும் ஏனைய தனிப்பட்ட விபரங்கள் இறுதி அறிக்கையில் சேர்க்கப்படாது. ஒரு விரிவான பகுப்பாய்வை உருவாக்க நீங்கள் வழங்கும் தகவல் ஏனைய நேர்காணல்களுடன் இணைக்கப்படும்.
2. **தனியுரிமை:** நீங்கள் வழங்கும் தகவல் தனிப்பட்டதாகவும் ரகசியமானதாகவும் இருக்கும். இது NCEASL மற்றும் இந்த ஆய்வின் அறிக்கை எழுத்தாளருடன் மட்டுமே பகிரப்படும்.
3. **தன்னார்வ பங்கேற்பு:** நீங்கள் கேள்விக்குப் பதிலளிக்க விரும்பாவிட்டால் தயங்காதீர்கள். உங்களால் முடிந்த மற்றும் பதில் கூற விரும்புவதற்கு மட்டும் பதிலளியுங்கள்.
4. **திரும்பப் பெறுவதற்கான உரிமை:** இந்த நேர்காணலை நீங்கள் எப்போது நிறுத்த விரும்பினாலும் எந்த விளைவுகளும் இல்லாமல் அவ்வாறு செய்ய உங்களுக்கு விருப்பம் உள்ளது.

பங்குதாரரின் விபரங்கள்
பங்குதாரரின் பெயர்:
பங்குதாரரின் வகை: (e.g., செயற்பாட்டாளர்/சட்டத்தரணி)
இடம்:

கேள்விகள்

1. மத சுதந்திரத்தின் நிலை தொடர்பில் மாவட்டத்தின் தற்போதைய நிலை குறித்து உங்கள் கருத்து என்ன?
   அ. 2023 முதல் மாவட்டத்தில் உள்ள முக்கிய பிரச்சினைகள் என்ன?

2. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக இம்மாவட்டத்தில் மத சுதந்திரத்தின் நிலை பாதிக்கப்படும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?
   அ. ஆம் எனில், இதன் தாக்கம் என்ன என்பதை விளக்க முடியுமா?
   ஆ. பாதிக்கப்பட்ட மதக் குழுக்கள் எவை?

3. இந்த மாவட்டத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விளைவு என்ன?
   அ. கடந்த 2 ஆண்டுகளில் மாவட்டத்தில் தாக்குதல்களின் பாதிப்புகள் தீர்க்கப்பட்டனவா?
   ஆ. இல்லையெனில், எந்தெந்தப் பிரச்சனைகள் இன்னும் உள்ளன?

4. 2023 ஆம் ஆண்டு முதல் மாவட்டத்தில் நில அபகரிப்பு நிலைமை என்ன?
   அ. அவ்வாறான நில அபகரிப்புக்கான உதாரணங்களை உங்களால் வழங்க முடியுமா?
   ஆ. நில அபகரிப்பில் ஈடுபட்ட மற்றும் நில அபகரிப்பால் பாதிக்கப்பட்ட தரப்பினர் யார்?

5. 2023 ஆம் ஆண்டு முதல் மாவட்டத்தில் மத மாற்றங்களின் நிலை என்ன?
   அ. மதமாற்றத்தில் எந்த மதக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன?
   ஆ. எந்த மதக் குழுக்கள் மதம் மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்?
   இ. மத மாற்றத்திற்கான பொதுவான காரணங்கள் என்ன?

6. 2023 ஆம் ஆண்டு முதல் இம்மாவட்டத்தில் மதத் தீவிரவாதத்தின் நிலை என்ன (இதில் அனைத்து மதங்களின் தற்போதைய நிலையும் அடங்கும்)?
   அ. மாவட்டத்தில் தீவிரவாதத்தின் (எந்த மதக் குழுவிலிருந்தும்) ஏதேனும் எதிர்காலப் போக்குகளை நீங்கள் காண்கிறீர்களா?

7. இந்த மாவட்டத்தில் வழிபாட்டுத் தலங்களைக் கட்டுவதற்கு ஏதேனும் மதக் குழுக்களுக்கு சிரமங்கள் உள்ளனவா?
   அ. ஆம் எனில், என்ன வகையான சிரமங்கள் உள்ளன?

8. இந்த மாவட்டத்தில் உள்ள மதக் குழுக்களுக்குள் அல்லது ஒரு மதக் குழுவின் வெவ்வேறு துணைக்குழுக்களுக்குள் ஏதேனும் மோதல்கள் அல்லது பிரச்சினைகள் இருப்பதை நீங்கள் கவனிக்கின்றீர்களா?
   அ. அப்படியானால், இந்தப் பிரச்சனைகள் என்ன என்பதையும் அவற்றின் பின்னணியில் உள்ள காரணங்களையும் விளக்க முடியுமா?

9. இந்த மாவட்டத்தில் உள்ள பெண்களுக்கு அவர்களின் மதத்துடன் பிணைந்துள்ள குறிப்பிட்ட பிரச்சனைகள் என்ன?

10. இந்த மாவட்டத்தில் தொல்பொருள் இடங்கள் தொடர்பான ஏதேனும் சிக்கல்கள் உள்ளனவா? சிக்கல்கள் இருந்தால், அவை என்ன?

11. 2023 ஆம் ஆண்டு முதல் இந்த மாவட்டத்தில் மத சுதந்திரத்தை மீறுவதில் ஈடுபட்டுள்ள முக்கிய அரசு மற்றும் அரசு சாரா செயற்பாட்டாளர்கள் யார்?

12. மத சுதந்திர நிலையில் மாவட்டத்தில் இராணுவத்தின் பங்கு என்ன?
    அ. அவர்கள் இந்த மாவட்டங்களில் சில மதக் குழுக்களுக்கு ஆதரவாகவும் ஏனையவர்களுடன் முரண்படுகின்றார்களா? அப்படியானால் விளக்கவும்.

13. மாவட்டத்தில் மதச் சுதந்திரம் மீறப்படுவது தொடர்பாக அரசாங்கத்தின் பதில் என்ன?
    அ. அவர்கள் எவ்வாறு தலையிடுகின்றார்கள்?
    ஆ. உங்கள் எண்ணத்தில் அது நேர்மறையான தலையீடா அல்லது எதிர்மறையான தலையீடா?

14. மத சுதந்திரம் குறித்த மோதல்களில் ஏதேனும் போக்குகள் அல்லது வடிவங்களை நீங்கள் காண்கின்றீர்களா? அப்படியானால் அவை என்ன?

15. மத சுதந்திரப் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ள எதிர்காலத்தில் மாவட்டத்தில் என்ன மாதிரியான பணிகள் செயல்படுத்தப்பட வேண்டும்? உங்கள் பரிந்துரைகள் என்ன?

